நேற்று (03.12.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை–2025 முன்னேற்பாடு நடவடிக்கைகள், வெள்ளப் பாதிப்பு கணக்கெடுப்பு மற்றும் பயிர்க் காப்பீடு குறித்து அனைத்து மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரியன்வாயில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தற்காலிக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு உணவு, உடை போர்வை பாய் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் , மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் ராஜவேல், பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

மழை நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட –

பயிர் மேலாண்மை - பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, டிச. 4 -

வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நேற்று (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து 01.12.2025 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் வழங்கிய உத்தரவின் படி, வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை இவ்வாண்டு 16.10.2025 அன்று துவங்கி அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வருவதுடன், அக்டோபர் மாதம் நிலவிய மோந்தா புயல் மற்றும் தற்போதைய டித்வா புயல் காரணமாக கனமழை மற்றும் அதி கன மழையாக இதுவரை 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 401.8 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 68,226 எக்டர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, பாதிக்கப்பட்டுள்ள நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனடியாக வடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

அதிக அளவில் அடைப்பு ஏற்பட்டு, வெள்ள நீர் தேங்குவதற்குக் காரணமாக உள்ள வாய்க்கால்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் தொடர்புடைய நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடைப்பினை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற்பொறியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

பயிர் பாதிப்புக்கு நிவாரணம்!

மேலும், வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் மாவட்ட அலுவலர் முதல் கள அலுவலர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்து பயிர் சேத நிலைகளுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு உரிய பயிர் மேலாண்மை ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் உடனடியாக, வருவாய்த் துறையுடன் இணைந்து வயல் ஆய்வு மூலம் 33 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பைக் கணக்கீடு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.

மேலும், நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிர் வாரியான தெளிவான அறிவுரைகளை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்குவதுடன் பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும் என்றும், பூச்சி, நோய் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணித்து, பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், இது போன்ற இயற்கை இடற்பாடுகள் நிகழும் நேரங்களில் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவிடவும் கேட்டுக்கொண்டார்.

விதைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள்தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், குறிப்பாக, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் போதுமான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மறு பயிர் செய்வதற்குத் தேவையான விதைகள், பூச்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றிட பயிர் பாதுகாப்பு மருந்துகளை இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அலுலவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பயிர் சேதம் குறித்து ஆய்வு!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ட்ரோன் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வாயிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் சேதம் குறித்த ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வேளாண் விஞ்ஞானிகள் துறை அலுவலர்களுடன் இணைந்து பயிர் வாரியான பொது வான பயிர் மேலாண்மைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளை தத்தம் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், சமுதாய வானொலி (FM - ரெயின்போ வானொலி பண்பலை) மூலம் தொடர்ந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அன்றாடம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கை!

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை வட்டார வேளாண் அலுவர்களுக்குத் தெரிவித்து உரிய ஆலோசனைகளைப் பெற்று பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று விவசாயிகளை வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஏற்கனவே முதமைச்சர் அவர்கள் 01.12.2025 ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்திய வாறு, அக்டோபர், 2025 மாதத்தில் பெய்த கனமழையால் 33 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலோடு உரிய படிவத்தில் உடன் அரசுக்கு அனுப்பிட வேண்டும் என்று கள அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி வேளாண்மைத்துறை இயக்குநர் .பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல்துறையின் தலைமைப் பொறியாளர் ஆர்.முருகேசன் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
270	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	3 Ton capacity electric wire rope Hoist for Debris filter system in Unit-I and II
271	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	Super heater safety valve silencer for Unit-II and III Boiler
272	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	10 Ton Capacity Electrically operated underslung hoist with steel wire rope complete set for PA fan-
275	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	350NB Seamless pipes and MS coupling set
213	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-2	Supply of sparing seal assembly for guillotine gate in FD fan outlet
216	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-2	Procurement of Cast basalt lined MS Bend for Ash Slurry Disposal and Recovery lines
217	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-2	Supply of Dynavane filter cell assembly for seal air fan system of xrp 1043 bowl mill
218	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-2	Supply of various sizes of high pressure tubes suitable for 600mw boiler
220	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-2	Supply of CPVC AND UPVC pipe fittings of EC plant
208	த.பொ / நிலக்கரி	Providing of Computer Operator Data Entry Operator to carry out the day to day data entry works
280	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	Scrapper feeder base stool structure
278	மே.பொ / கொநி / வ.செ.அ.மி.நி-1	250NB Dome valve assembly

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/6450/ஒப்பந்தப்புள்ளி/2025

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் பேரூராட்சி. 4. வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆர் வெங்கடேசன் ஏற்பாட்டில். டித்வா. புயலால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு வீடாகச் சென்று மளிகை பொருட்கள் தொகுப்பினை பேரூர் செயலாளர். என். பாண்டியன் வழங்கினார். க. செம்பியன்.எல் சசிகுமார்.நமச்சிவாயம் கோபி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

தமிழ் மொழியில் A.I. எனப்படும்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 4-

இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? தமிழ் மொழிக்கென்று எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? என்பது குறித்து ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சருக்கு, கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியா AI மிஷனின் தேசிய மொழி செயலாக்க திட்டத்தின் கீழ், பேச்சு அடையாளம் காணல், இயந்திர மொழிபெயர்ப்பு, உள்ளடக்க மேலாண்மை போன்ற நோக்கங்களுக்காக இந்திய மொழிகளில் செயற்கை நுண்ணறிவு தரவுத் தொகுப்புகளை ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளதா? அப்படி உருவாக்கியிருந்தால் அதற்கான நிதியுதவி வழங்கியுள்ளதா? அந்தத் தரவுத் தொகுப்புகளின் தற்போதைய நிலை என்ன? ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன? குறிப்பாக தமிழ் மொழிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

இந்தியா AI மிஷன் கீழ், தேசிய மொழி செயலாக்கம் (NATIONAL LANGUAGE PROCESSINGNLP), பேச்சு அடையாளம் காணல் (SPEECH RECOGNITION), இயந்திர மொழிபெயர்ப்பு (MACHINE TRANSLATION) மற்றும் உள்ளடக்க மேலாண்மை (CONTENT MODERATION) ஆகியவற்றுக்காக அரசு இந்திய மொழிகளுக்கான செயற்கை நுண்ணறிவு தரவுத்தொகுப்புகளை (AI DATASETS) உருவாக்கியுள்ளதா அல்லது நிதியுதவி அளித்துள்ளதா? அவ்வாறு இருந்தால், அத்தகைய தரவுத்தொகுப்புகளின் தற்போதைய நிலை, பயன்பாட்டிற்கு வந்துள்ளதின் விவரம்? மொழி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டுக்கும் இத்தகைய தரவுத் தொகுப்புகளை உருவாக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் அதை செயல்படுத்தும் நிறுவனங்களின் விவரங்கள் என்ன? ஆகியவற்றின் மொழிவாரியான

தமிழ் மொழியில் பேச்சு வகைகள் (SPOKEN VARIANTS) உட்பட உயர்தர பிரத்யேக தரவுத் தொகுப்புகளை (DEDICATED HIGHQUALITY DATASETS) உருவாக்கி, தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவின் துல்லியம், பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா; அவ்வாறு இருந்தால், அதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகள், கால அட்டவணை மற்றும் வழங்கப்பட்ட நிதி ஆகிய விவரங்கள் என்ன?

மொழியியல் நிபுணர்கள், இத்தகைய தரவுத்தொகுப்புகளின் உருவாக்கத்திற்கு வழிகாட்டுவதற்காக தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஏதேனும் பல்கலைக்கழகங்கள் ஆலோசனைக் அல்லது கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளனவா? அவ்வாறு நடத்தப்பட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ் மொழி தரவுத்தொகுப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட, ஒப்புதல் அளிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதியின் மொத்தத் தொகை விவரங்கள் என்ன?

இவ்வாறு தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட

4 குளங்களில் டிட்வா புயல் மழை காரணமாக நீர் நிறைந்தது!

சென்னை, டிச.4-

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல், புதிய குளங்கள் அமைத்தல், ஏற்கனவே உள்ள குளங்களை தூர்வாரி புனரமைத்தல், நீர்வழிக்கால்வாய்களை தூர்வாரி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, கடந்த ஆண்டில் அடையாறு மண்டலம், கிண்டி, ரேஸ்கோர்ஸ் வளாகத்தில் 14,070 கன மீட்டர் (அ) 0.50 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கம் கொண்ட ஏற்கனவே உள்ள 2 குளங்களில் அகலப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 19,560 கனமீட்டர் (அ) 0.69 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கும் திறனுடன் புனரமைக்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக 4 குளங்கள் 1,10,800 கன மீட்டர் (அ) 3.91 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கும் திறனுடன் கடந்த ஆண்டில் அமைக்கப்பட்டது.

இந்த 4 குளங்களின் கொள்ளளவினை இரட்டிப்பாக அதிகரிக்கும் வகையில் இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 49,072 ச.மீ. பரப்பளவில், 2,45,360 கன மீட்டர் (அ) 8.66 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறனுடன் 24.53 கோடி லிட்டர் மழைநீர் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, இந்த 4 குளங்களிலும் மழைநீர் சேமிக்கப்பட்டு நீர் நிறைந்துள்ளது. இதன் காரணமாக கிண்டி, மடுவின்கரை, வேளச்சேரி, வேளச்சேரி வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதி மக்கள் மற்றும் ஐந்து பர்லாங் சாலை ஆகிய பகுதிகளில் மழை வெள்ளப் பாதிப்புகள் ஏதுமின்றி இப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெருநகர சென்னை மாநகராட்சி

வருவாய் துறை

வ. து. ந. க. எண். மு 7/005394-1/RDHQ /2025

மின்னணு மறு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு (இரட்டை உறையில்)

மாநகர வருவாய் அலுவலர் (வருவாய் துறை தலைமையிடம்) அவர்களால் கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

வருவாய் துறை தலைமையிடத்து கூடுதல் மாநகர வருவாய் அலுவலர்கள் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர்களின் கள ஆய்வு பயன்பாட்டிற்கு 5 எண்ணிக்கை வாடகை வாகனம் ஒப்பந்த பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு பணியமர்த்தும் பணி.

பணியின் மதிப்பு ரூ.**45,34,200/-**

முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%** ரூ.**45,342/-**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **23.12.2025** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: **24.12.2025** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 6469 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மாநகர வருவாய் அலுவலர் (பொ)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற நினைவில் வாழும் தலைமை செயற்குழு உறுப்பினர் குளித்தலை சிவராமன் அவர்களின் 84 வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்தில் திருவுருவப்படத்திற்கு நகர கழக செயலாளர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் குளித்தலை சிவராமன் அவர்களின் துணைவியார் அகிலா சிவராமன், சகுந்தலா பல்லவிராஜா, வே.பல்லவிராஜா, வழக்கறிஞர் சாகுல்அமீது, கே.எம்.செந்தில்குமார், நா.தமிழரசன், கே.பி.அருண்மொழி, பெ.ஆனந்தகுமார், பெ.வினோத், தாளியம்பட்டி ரமேஷ், கந்தசாமி மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.